DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 116/2021

Prosecution witness – PW.2

| | | |
|---|---|---|
| Name | :திருமதி.மணிமேகலை | Caste: |
| Father's Name | : முருகவேல் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

18.05.2026 – 11.29 AM

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>:–

1. நான் மீனாட்சிபுரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன வள்ளி எனது தாயார் ஆவார். அ.சா.1 எனது அப்பா. சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மாலையில் நான் எனது வீட்டில் இருந்தபோது ஊர்க்காரர்கள் எனக்கு போன் செய்து கமுதி தாலுகா ஆபீஸ் எதிரே எனது தாயாருக்கு விபத்து ஏற்பட்டு அவரை ஆட்டோவில் ஏற்றி கமுதி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருப்பதாக தகவல் அளித்ததால் நான் உடனடியாக மேற்படி மருத்துவமனைக்கு சென்றபோது எனது தாயாருக்கு பின்னந்தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இருந்தது. மருத்துவர்கள் முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் எனது தாயார் மதுரை அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே இறந்துவிட்டார். எனது தாயாருக்கு எவ்வாறு விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.18 16:34:40 +0530